Registered as a News paper i1 Ceyon விலை சதம் 10



ராஜ பீடி கம்பெனி, கொழும்பு-14

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 9 [4-5-67] இதழ் 82
பிலவங்க சித்திரை 21 முஹறம் 23 வியாழக்கிழமை



ராஜ பீடி கம்பெனி, கொழும்பு-14

உள்ளூராட்சி சேவை சட்ட திருத்த மசோதா:

# மே 18-ம் திகதிவரை மந்திரி அவகாசம் கேட்டுள்ளார்

## ஆளும்கட்சி எம். பி.க்கள் விவாதிப்பதற்கு சந்தர்ப்பம்?

கொழும்பு, புதன்

உள்ளூராட்சி சேவைச் சட்டத்தைத் திருத்துவதற்கான மசோதாவை மே மாதம் 18-ம் திகதி செனட் சபையில் சமர்ப்பிப்பதற்கு அனுமதியளிக்கும்படி உள்ளூராட்சி அமைச்சர் செனட்டர் எம். திருச்செல்வம் இன்று செனட்சபையில் ஒரு கோரிக்கையை சமர்ப்பித்தார்

மேற்படி திருத்த மசோதா இன்று செனட் சபையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு திகதி குறிப்பிடப்பட்டிருந்தது- ஆனல் அமைச்சர் மசோதாவை சமர்ப்பிப்பதற்கு மே 18-ம் திகதிவரை அவகாசம் தரும்படி சபையைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்,

18-ம் திகதிக்கு முன் அரசாங்கக்கட்சியின் பார்லிமெண்ட் குழுகூடி மசோதாவைசாங்கோ பாங்கபாக ஆராயும் என்று தெரிகின்றது. அதற்கு சந்தர்ப்பம் அளிக்கும் வகையிலேயே மசோதா சபையில் சமர்ப்பிக்கப்படுவது பின்போடப்பட்டிருப்பதாகக் கருதப்படுகின்றது.

### சிலர் எதிர்ப்பு

உள்ளூராட்சிச் சேவைச் சட்டதிருத்தமசோதா உள்ளூராட்சிஅமைச்சருக்குசர்வ அதிகாரமும் வழங்கக்கூடியதாக இருப்பதால் அதை இப்போது நிறைவேற்றக் கூடாதென்றும் செனட் சபையில் அது தாக்கல்செய்யப்பட்டபோதிலும் அந்த மசோதாவை அரசாங்க பார்லிமெண்டரிக் குழுவின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்க வேண்டுமென்றும் அரசாங்கக்கட்சி எம்.பி.க்கள் பலர் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கேட்டுள்ளனர்.

இந்தத் திருத்த மசோதா உள்ளூராட்சிச்சேவை சம்பந்தமாக உள்ளூராட்சி அமைச்சர் பார்லிமெண்டின் அனுமதி பெருமலே தாம் விரும்பியபடி உத்தரவுகள் பிறப்பிக்கலாமென்றும் இது சர்வாதிகாரப் போக்கை வளர்த்துவிடுமென்றும் அரசாங்கக்கட்சி எம்.பி. க்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

உள்ளூராட்சி சேவைக் கமிஷன் தனது சுயநிர்ணய உரிமையை இழந்துவிடுமென்றும், இந்த திருத்த மசோதா உள்ளூராட்சி மன்ற குமாஸ்தாக்களை இடமாற்றஞ்செய்ய வசதியளிப்பதும் பல தீங்குகளுக்கு வழிவகுக்குமென்றும் அரசாங்கக் கட்சி எம். பி.க்கள் சிலர் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

இத்திருத்த மசோதாவில் உள்ளூராட்சி அமைச்சருக்கு அதிக அதிகாரம் வழங்கும் அம்சங்கள் திருத்தப்பட வேண்டுமென்று அவர்கள் கோரியுள்ளனராம்.

---

யாழ். நகரபஸ்நிலைய படுகொலை

## கார் சொந்தக்காரர் சந்தேகத்தின்மீது கைது

### குத்தியதாகக் கூறப்படுபவர் பொலிசாரால் தேடப்படுகிறர்

யாழ்ப்பாணம், வியா.

நேற்று முன்தினம் மாலை யபழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கு அருகாமையில்வேலன் கிட்டினன் என்ற இளைஞர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக தேடப்பட்டு வந்த வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இரத்தினம் என அழைக்கப்பட்டு இரத்தின சபாபதி என்பவர் நேற்று நள்ளிரவு பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

இவரைவடமாகாணம்உதவி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சி. தவராஜா யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பகுதி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. மெண்டிஸ் ஆகியோர் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் வட்டுக்கோட்டையில் வைத்து கைது செய்தார்கள்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இரத்தினசபாப யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பில் வைக்கப்பட்டார். மரணமான கிட்டினனைக்

[6-ம் பக்கம் பார்க்க]

---

## கைத்தொழில் பேட்டை எங்கே அமையும்?

### இன்னும் இடம் தெரிவு செய்யப்படவில்லை.

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணத்தில் கைத்தொழில்பேட்டை அமைப்பது சம்பந்தமான ஆலோசனைக்கூட்டம்யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் நேற்று மாலை நடைபெற்றது. அரசாங்க அதிபர் திரு வேணன் அபயசேகரா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு கைத்தொழில் அபிவிருத்திசபைத் தலைவர் திரு. ஜேம்ஸ் லனரோல், பொது ஜனத் தொடர்பு அதிகாரி திரு. டபிள்யூ. செல்வரத்தினம் உட்பட அரசாங்க உயர்தர அதிகாரிகளும், எம். பி.க்களும், யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தசுமார் 50க்கும் மேற்பட்ட கைத்தொழில் ஆலைகளின் அதிபர்களும் சமுகம் கொடுத்திருந்தார்கள்.

நீர்கொழும்பிலுள்ள "எக்கல" கைத்தொழில்பேட்டையைப்போன்று யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவிருக்கும் கைத்தொழில்

[6-ம் பக்கம் பார்க்க]

---

## செனட்சபை தெரிவுக் குழு நியமனம்

### அரசியல் சாஸனத்தை திருத்துவதுபற்றி ஆராய்வர்

கொழும்பு, புதன்

அரசியல் சாஸனத்தைத் திருத்துவதுபற்றி ஆராய்வதற்கான செனட்சபை தெரிவுக்குழுவை இன்று செனட்சபை நியமித்தது.

டாக்டர் எம். வி. பி. பீரிஸ், ஏ.எப்.விஜயமானே, எம். திருச்செல்வம், ஏ. பி. ஜயசூரியா, ஜி. சி. ரி. ஏ. டி. சில்வா, எஸ். எம். எச். மசூர், சோமரட்ண ஆகியவர்கள் இக் குழுவில் அங்கம்வகிக்கிருர்கள்.

செனட்டர்கள் ஏ. பி. ஜயவர்தனவும், ஜி. சி. ரி. ஏ. டி. சில்வாவும் தாம் குழுவில்கடமைபுரியவிரும்பவில்லையென்றும், பிரேரணை முறையாக இல்லையென்றும் ஆட்சேபித்தார்கள். சபைத்தலைவர் பிரேரணை முறையானதுதான் என்று தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து பிரேரணை நிறைவேறியது. இந்த குழு செனட்டர்களும் ஜனப்பிரதிநிதிகள் சபையிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள 15 பேர் கொண்ட தெரிவுக்குழுவுடன் சேர்ந்து அரசியல் சாஸனத்தைத் திருத்துவது பற்றி விசாரணைகளில் ஈடுபடுவார்கள்.

---

### தேவை

நெசவு வேலையில் அனுபவம் வாய்ந்த பெண்கள் தேவை. கீழ் கண்ட விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

வ. நவரத்தினம்,
'கருணை நெசவு நிலையம்'
வீமன்காமம்,
தெல்லிப்பளை.

1765

---

## முக்கிய மருந்துகள் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளிலும், தனிப்பட்ட மருந்துச்சாலைகளிலும் சில முக்கிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மந்திகை மனநோயாளர் சிகிச்சை நிலையத்திலும் மருந்துகள் தட்டுப்பாடு காரணமாக நோயாளிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். கண்சிகிச்சைக்குமுக்கியமாகதேவைப்படும் சில மருந்து வகைகள் யாழ்ப்பாணத்தில் கிடைக்காததால் அம்மருந்துகளை கொழும்பிலிருந்து வரவழைக்கவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

---

## வெளிநோயாளர் சிகிச்சை நிலையத்துக்கு இடவசதி

### மாநகரசபையிடம் கோருவதற்கு ஆஸ்பத்திரி சபை உபகுழு முடிவு

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் புதிய பஸ் நிலையத்துக்கு அருகாமையிலிருக்கும் மின்சார நிலையத்தின்காணியின் ஒருபகுதியை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வெளிநோயாளர் சிகிச்சை நிலையத்தை அமைக்க தந்துதவுமாறு யாழ். மாநகர சபையினரைக் கேட்பதென நேற்று நடைபெற்ற யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி சபை கட்டட உபகுழுவின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி ஆலோசனை மண்டபத்தில் நடைபெற்ற இக்

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

இன்பத்துக்காகவெளியிடங்களை நாடுகின்றோம். ஏமாற்றமடைகின்றோம். உண்மை இன்பம் நமக்குள்ளே தான் மிக சமீபத்தில் உள்ளது. தேடினால் கிடைக்கும் 'தட்டினால் திறக்கும்.'

— சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஞு
சித்திரை மீ 21உ. (4-5-67)


## ராஜாஜிவாழ்க

இந்தியாவின் முதுபெரும் அரசியல் ஞானியும் உலகம்போற்றும்ஒப்புயர்வற்ற தமிழ்ப்பெருமகனுமான சக்கரவர்த்தி சி. ராஜகோபாலாச்சாரியார், குடல்சரிவுநோய்க்காகச் சத்திரசிகிச்சை செய்யப்பட்ட பின்னர் மீண்டும் உடல்நிலைசிறிது பாதிக்கப்பட்டிருப்பதாக வெளிவந்துள்ள செய்தி கவலையளிப்பதாகும். அவர் பூரண குணமடைந்து நீடுவாழவேண்டுமெனப் பிரார்த்திக்கிறோம்.

பெரும் வருவாய் தரக்கூடிய வக்கீல் தொழிலைவிட்டு இந்தியநாட்டின் விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்ட ராஜாஜி உப்புச்சத்தியாக்கிரகம்செய்து 'தென்னாட்டுக் காந்தி' என்ற பெயரையும் பெற்றவர். பலதடவைகள் சிறை சென்றவர். இந்தியா அந்நியராட்சியிலிருந்து விடுதலையடைந்த பின் சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர்ஜெனரலாகவும் பதவிவகித்தவர். இந்திய தேசியக் காங்கிரசைக் கட்டி வளர்த்தவர்களில் ஒருவராக இருந்தாலும் சுதந்திரத்தின் பின்அதன் கொள்கைகளும் போக்கும் தமது கொள்கைக்கு ஒத்துவராததாலும் ஜனநாயகம் சிறப்புற விளங்க பலம்வாய்ந்த எதிர்க்கட்சி ஒன்று இருக்கவேண்டியது அவசியம் என்று கருதியதாலும் அகிலஇந்திய ரீதியில் 'சுதந்திரக் கட்சி' என்ற புதிய அரசியல் கட்சியொன்றை உருவாக்கி அதை முன்னணிக்குக் கொண்டுவந்தார். ஒரே கட்சி நீண்டகாலம் ஆட்சி பீடத்திலிருப்பதால் நிர்வாக ஊழல்களுக்கு இடமேற்படுகிறதெனக்கூறி சென்ற பொதுத்தேர்தலில் எதிர்க்கட்சிகளுக்குள்கூட்டணி உருவாக்கி பலராஜ்யங்களில் காங்கிரசல்லாத அரசாங்கம் உருவாகக் காரணமாக இருந்திருக்கிறார்.

இன்று ராஜாஜிக்கு தொண்ணூறு வயது. இந்தத் தள்ளாத வயதிலும் ஒய்வு ஒழிச்சலின்றி இந்தியா முழுவதிலும் பிரயாணம் செய்து கூட்டங்களில் பேசியும், பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டியளித்தும், பத்திரிகைகளுக்கு கட்டுரைகள் எழுதியும் தனக்குச்சரியெனப்பட்டதை, நாட்டுக்கு நல்லதெனத் தாம் கருதுவதை அச்சமின்றி எடுத்துக்கூறிவருகிறார்.

தேசாபிமானமும், தெளிந்த ஞானமும், அரசியல் அறிவும், சமாதான வேட்கையும் நிறைந்த ராஜாஜியின் ஆலோசனைகளைக் கேட்டு ஆட்சி செலுத்தாகத் தமிழ் நாட்டில் ஆட்சிப்பொறுப்பேற்றுள்ள தி. மு. கழகத் தலைவரும் முதலமைச்சருமான திரு. சி. என். அண்ணாதுரை கூறியிருக்கிறார். தமிழ் நாட்டுக்கு மட்டுமல்லாது இந்தியாவுக்கும் உலக நாடுகளுக்கும் ராஜாஜியின் ஆலோசனையும் அறிவுரையும் கிடைக்கவேண்டும். அவர் பூரண குணமடைந்து நீடுழிவாழ வேண்டும்.

# மாவட்டசபைகள் அமைக்க பணம் கொடுப்பது யார்?

## மத்திய அரசாங்கமா? மக்கள் மீது வரிபோட்டு வசூலிப்பதா?

(திரு. மு. சிவசிதம்பரம் உடுப்பிட்டி எம். பி.)

[மாவட்டசபைகள் பற்றிப் பலரும் பலவிதமாக அபிப்பிராயம் தெரிவித்து வருகின்றனர். 'ஈழநாடு' கருத்தரங்கிற்கு வாசக நேயர்கள் தங்கள் கருத்துக்களை தெளிவாகவும் சுருக்கமாகவும் தாளில் ஒரு பக்கத்தில் எழுதி அனுப்பினால் அவை பிரசுரிக்கப்படும். சமீபத்தில் யாழ். முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் தமிழ் காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்த உடுப்பிட்டி எம்.பி. திரு. மு. சிவசிதம்பரம் மாவட்ட சபைகள் பற்றித் தெரிவித்த கருத்தை வாசகநேயர் ஒருவர் சுருக்கமாகத் திரட்டித் தந்திருக்கிறார், அதை இங்கு வெளியிடுகிறோம்.]

மாவட்டசபை வந்தால் தென்னிலங்கையில் ஒரு தமிழனுக்காவது உத்தியோகம் கிடையாது. வடக்கு, கிழக்கு மாகாணத்திற்கு வெளியே சிங்களவருக்குத்தான் உத்தியோகம் கிடைக்கும். தமிழ் மொழியில் பயின்று, தமிழ்மொழியில் பரீட்சை எடுத்து தெரிவு செய்யப்பட்ட 60 தமிழ் உள்ளூராட்சிமன்ற ஊழியருக்கு இன்னும் வேலைகிடைக்கவில்லை. இந்த நிலையில் மாவட்டசபை வந்தால் தமிழ் வாலிபர்களுக்கு வேலைகிடைக்குமா? உள்ளூராட்சி மன்றங்களில் வேலை செய்ய தெரிவு செய்யப்பட்ட 60 தமிழருக்கும் ஏன் வேலை கொடுக்க வில்லைஎன தமிழ் மந்திரியைக் கேட்டபோது, என்னால் என்ன செய்யமுடியும் என்று கூறிவிட்டார். உள்ளூராட்சி மந்திரி தமிழராக இருந்தபடியால் 60 பேருக்கும் நியமனம் கிடைத்துவிடும் என நான் நம்பினேன். ஆனால் இன்னும் வேலை கிடைக்கவில்லை. இவர்களைப் போல் ஆயிரக்கணக்கான வாலிபர்கள், தமிழ் மொழியில் சித்தியடைந்துள்ளனர். மாவட்டசபை வந்தால் ஒருவாலிபருக்காவது உத்தியோகம் கிடைக்காது. இதனாலேயே மாவட்டசபையை எதிர்க்கிறோம். இரண்டு மாகாணங்களில் தமிழர்களை அடக்கும் சூழ்ச்சியைமுறியடித்து, ஈழநாடு முழுவதும்தமிழருக்குச் சொந்தம்என்ற நிலைமையை நிலைநாட்டுவோம்.

மாவட்டசபைகள் மத்திய அரசாங்கத்தின் கீழ் இயங்கும் என பிரதமர் டட்லி கூறிவிட்டார். மாவட்டசபை வந்தால் கல்முனை போன்ற இரு இன மக்கள் வாழும் மாவட்டத்தில் கலவரம் மூளாதா? தமிழர் முஸ்லிம்கள் பிரிந்துவாழும் கல்முனையில் மாவட்டசபை வந்தால், பயங்கர நிலைமை ஏற்படலாம்.

பிரதமர் பண்டாரநாயக்கா ஒரு சமயம், சமஷ்டி என்பதை விளக்கி எழுத்தில் தருமாறு, சமஷ்டித் தலைவரை கேட்டார். யாழ்ப்பாணத்திற்கு ஒரு பிரதமர் யாழ்ப்பாணத்திற்கு ஒரு கவனர் ஜெனரல் இருப்பதுதான் சமஷ்டி என திரு. செல்வநாயகம் தெரிவித்தார். இன்று கவனர் ஜெனரல், கவனராக மாறி, கவர்னர் கவர்மண்ட் ஏஜண்டாக மாறி மாவட்டசபை தலைவர் என்ற நிலையில் வந்து நிற்கிறது. மாவட்ட சபைக்காவது தலைவராகிவிடுவோம் என்ற நப்பாசையால்தான் மாவட்டசபை கோருகிறார்கள்.

இந்நாட்டில், தமிழர் மீண்டும் தன்மானத்துடன் வாழவேண்டும். நாளுக்கு நாள், தமிழரின் நிலைமை மோசமடைந்து வருகிறது. தமிழர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

மாவட்டசபை நிறுவ எங்கிருந்து பணம் கிடைக்கப் போகிறது? மத்திய அரசாங்கம் கொடுக்கப் போகிறதா? வரிபோட்டு மக்களை வாட்டி எடுக்கப் போகிறார்களா?.

# கல்விக்கு யு தாண்ட் வழங்கிய 'பரிசு'

நியூயோர்க், மே 3

சமீபத்தில் சமாதானப் பரிசாக தமக்கு வழங்கப்பட்ட நேருபரிசின் ரொக்கப்பணத்தை [ரூ. 1 லட்சம்] ஐ. நா. தலைமைக்காரியதரிசி யுதாண்ட் ஐ. நா. சர்வதேச பாடசாலைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

நேற்று தமது காரியாலயத்தில் நடத்தப்பட்ட வைபவமொன்றில் இப்பணத்தை மேற்படி பாடசாலை தர்மகர்த்தாக்களிடம் அவர் வழங்கினார்.

# 'வடக்கில் சிங்களத்திற்கு மூன்றாவது இடம்'

கொழும்பு, புதன்

'வடமாகாணத்தில் சிங்களத்திற்கு மூன்றாவது இடம் கொடுக்கப்பட்டுள்ளது. தற்பொழுது ஆட்சியிலுள்ள தேசிய அரசாங்கத்தின் நோக்கம் சிங்கள மொழிக்கு ஆபத்து தேடுவதேயாகும்' என்று சுதந்திர சதுக்கத்தில் எதிர்க்கட்சி முன்னணி சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும்பொழுது எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

நாட்டின் எல்லாப் பாகங்களிலும் சிங்களத்திற்கும் தமிழிற்கும் சம அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. ஆனால் வடமாகாணத்தில் சிங்களத்திற்கு மூன்றாவது இடம் கொடுக்கப்பட்டுள்ளது. எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் நாட்டு மக்களின் நன்னுக்காக பாடுபடுவோம்.

## பிரயாணிகள் கஷ்டம்

பண்டத்தரிப்பு, புதன்

இளவாலை பிரதானவீதியில் முள்ளானைச்சந்தியில் பஸ்சேவை ஆரம்பகாலம் தொடக்கம் இருந்துவந்த பஸ் நிறுத்தும் இடம் தற்போது நீக்கப்பட்டுள்ளது. [illegible] திற்கும் [illegible] மாணவிகள் பெரிதும் கஷ்டமடைகின்றனர்.

## ஆண்டுவிழா

பலாலி, புதன்

வான்புகழ் வள்ளுவர் போன்ற பேரறிஞர்களாலே தமிழ்மொழி இன்று மேன்மைமிக்க மொழியாக வெளிநாட்டினரால் பாராட்டப்படுகிறது நம்நாடு. நம் மொழி வளமடையவேண்டுமானால் பல வள்ளுவர்கள் நம்மத்தியில் தோன்றவேண்டும்' என வீமன்காமம் இளைஞர்சங்கமும் சனசமூகநிலையமும் கொண்டாடிய 23வது ஆண்டு விழாவில் பேசிய புதுமைலோலன் குறிப்பிட்டார். மேற்படி விழாவிற்கு திரு. செ தி. யோகநாதன் தலைமைதாங்கினார்.

## இந்தியா . . .

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

பையா சென்ற வாரம் திரு. அண்ணாதுரையைச்சந்தித்து இலங்கையிலிருந்துவரும்இந்திய வம்சாவழியினருக்குப் புனர்வாழ்வளிப்பதுசம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இலங்கை-இந்தியஒப்பந்த அமுல் மசோதா இலங்கைப் பார்லிமெண்டில் நிறைவேறியதும இலங்கை-இந்தியஒப்பந்தம் அமுலாகத்தொடங்கிவிடுமென்றும் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினரில் இந்தியப் பிரஜாவுரிமை பெற்றவர்கள் இந்தியா திரும்பத் தொடங்கிவிடுவார்களென்றும் திரு. சுப்பையா திரு. அண்ணாதுரையிடம் கூறியதாகத்தெரிகிறது.

[5-ம் கலத் தொடர்ச்சி]

விரும்பும் வண்ணமும்
வேதத்தின் வண்ணமும்
கரும்பின் இன்மொழிக்
காரிகை வண்ணமும்
விரும்புவார் வினைதீர்த்
திடும் வண்ணமும்
அரும்பின் வண்ணமுமா
வர் ஐயாறரே.
— அப்பர்சுவாமிகள்

[ஐயாற்றுத் தலத்தின்கண் எழுந்தருளியுள்ள இறைவர், எல்லாரும் விரும்பும் இயல்பும் வேதத்தின் இயல்பும், கரும்பினையொத்த இனிய மொழியினை உடைய உமையம்மையார் இயல்பும் தம்மை விரும்பும் மெய்யடியார்களின் வினைகளைத் தீர்த்திடும் இயல்பும் அரும்பின் இயல்பும் உடையவராவர்.]

# ஐயாறன் எழுதியது

கிளிநொச்சியிலே கமம் செய்யும் ஓர் அன்பர் நேற்று வந்தார். அங்கு சாகுபடி செய்வதினால் நஷ்டம் தான் ஏற்படுகிறதேயன்றி லாபமில்லை என்றும் அரசாங்க உதவியென்பது உண்மையில் இல்லை என்றும், கமம் செய்வதை விட்டுவிடலாமென்றே தோன்றுவதாயும் வருத்தத்துடன் சொன்னார்.

இதைக்கேட்டுத்திடுக்கிட்டு விபரம் கேட்டேன். அரசாங்கம் 'டிராக்டர்களுக்கு' தனிப்பட்டவர்கள் கேட்பதை விட அதிக கட்டணம் வசூலிக்கிறதாம், ஆட்கள் கூலி வரவர அதிகரிப்பதுடன், ஆட்கள் கிடைப்பதும் கஷ்டமென்றும், அதிக கூலி கொடுத்தாலும் அவர்கள் சரிவர உண்மையாக வேலைசெய்வதில்லை என்றும், புகார்களை அடுக்கிக்கொண்டே போனார். இதையெல்லாம் கேட்க மிக ஏமாற்றமாக இருந்தது.

ஃ ஃ ஃ

'அதிக உணவைப் பயிரிடுக' என்று அரசாங்கம் கோஷம் போடுகின்றது. தமது கைப் பணத்தைக் கொண்டு நிலம் வாங்கி, அங்கு வீடும் கட்டி, அரும்பாடுபட்டு நிலத்தைச் சாகுபடிசெய்யும் அன்பர், முடிவில் கண்டபலன் நஷ்டம் தான் என்று மன முடைவதாயின், எப்படி உணவு உற்பத்தி பெருக முடியும்? ஆரம்பத்தில் மிக உற்சாகத்துடன் நிலம் வாங்கி பெரும் செலவில் திருத்தியவர்களில் சிலர் பின்பு பல காரணங்களால், கமம் செய்ய முடியாமல், காணிகளை விட்டுவிட்டு, கைப் பொருளையும் இழந்து தவிப்பதாகப் பல செய்திகளைக் கேள்விப்படுகிறேன்.

உணவு உற்பத்தி பெருக வேண்டுமாயின் டிராக்டர் சேவை, உரம் இவை மிக மலிவாகக் கிடைக்கச் செய்ய வேண்டுமென்றும், உழைப்பாளிகள் தட்டின்றி கிடைக்க வேண்டுமென்றும் கூறுகிறார் அன்பர்.

விவசாயத்துக்கு உயிர் நாடி எனப்படும் கால்நடைகளைக் கொன்றுவிட்டு, வெளிநாடுகளிலிருந்து வரும் டிராக்டர்களையே நம்பி நாம் கமம் செய்ய வேண்டியுள்ளது. டிராக்டர் இல்லாவிட்டால் கமமே செய்ய முடியாதென்ற அளவுக்கு நிலைமை மோசமாகிவிட்டது. அதனால் டிராக்டர்களுக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டு கட்டணமும்வெகுவாக அதிகரிக்கின்றது.

மலைநாட்டிலே லட்சக்கணக்கான உழைப்பாளர்கள் உணவு உற்பத்தி செய்யத் தயாராக இருப்பினும், அவர்கள் உழைப்பை ரப்பர், தேயிலை முதலிய வர்த்தகப் பொருள் உற்பத்திக்கே பயன்படுத்தி வருகிறோம். வெளிநாடுகளுக்கு அன்னக்காவடி தூக்கி, பல்லைக் காட்டினாலும், இங்கு பட்டினியால் பாதிப்பேர் செத்தாலும்கூட, அம்மக்களுக்கு நிலம் கொடுத்து, உணவு சாகுபடி செய்ய அனுமதி அளிக்கக்கூடாதென்ற கண்மூடித் துவேஷக் கொள்கையைக் கடைப்பிடித்தால், எப்படி உணவு உற்பத்தி பெருக முடியும்? உழைப்பாளிகளுக்குள் வகுப்பு வேற்றுமையா? மே விழா நடத்தி என்ன புண்ணியம்?

[2-ம் கலம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்குபாகிஸ்தானில் புயல்: 10 கிராமம் நாசம்

## 25 பேர் பலி; 200 பேர் காயம்

கராச்சி, மே. 3

**கிழக்குப் பாகிஸ்தானில் இரு நாட்களுக்கு முன் வீசிய கடும் புயல் காரணமாக 25 பேர் உயிரிழந்தனர். இருநூற்றுக்கும் அதிக மானேர் காயமுற்றனர். பத்துக் கிராமங்கள் நாசமாகின. ஆயிரக்கணக்கானேர் வீடிழந்தனர்.**

இருபது நிமிடம்வரை வீசிய இப்புயல் இவ்வித சேதத்தை விளைவித்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் தந்திப்போக்குவரத்துத் தொடர்புகள் துண்டிகக்ப்பட்டுள்ளன.

## பீகார் வரட்சிநிலையை படமெடுப்பதற்கு கண்டனம்

புதுடில்லி, மே 3

பீகாரில் நிலவி வரும் வரட்சிநிலையை வெளி நாட்டினர் டெலிவிஷன் படமெடுத்து வருவது பற்றி இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. டாங்கே பலத்த கண்டனம் தெரிவித்துள்ளார்.

இவ்விதம் அவர்கள் படம் எடுப்பதற்கு அனுமதியளிக்கக் கூடாதெென அவர் அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டார்.

மனிதனின் கஷ்டத்தில் சிலர் சொந்த லாபத்தைத் தேடிக் கொள்ள முயற்சிக்கிறார்களென்றும், இது கண்டிப்பாகத் தடைப்படுத்தப் படவேண்டுமெனவும் அவர் வற்புறுத்தியுள்ளார்.

## சந்திரனை படம்பிடிக்க புதிய செயற்கை கிரகம்

### இன்று அமெரிக்கா அனுப்புகிறது

கேப்கென்னடி, மே 3

சந்திரனின் முன்புறத்தையும் பின்புறத்தையும்பரந்த முறையில் படம்பிடித்துக் காட்டவல்ல, சந்திரனைச் சுற்றி வட்டமிடும் செயற்கைக் கிரகம் ஒன்றினை பறக்க விடுவதற்கான ஆயத்தங்களை அமெரிக்கா செய்கிறது. இச்செயற்கைக்கிரகம் நாளை அனுப்பப்படவிருக்கிறது. சந்திரனைச் சுற்றி வட்டமிட்டு போதுமான தகவல்களைச் சேகரிக்க அமெரிக்கா அனுப்பி வைத்துள்ள கிரகங்களில் இது நான்காவதாகும்.

புதிதாக அனுப்பப்படவிருக்கும் செய்மதி, பூமியிலுள்ள அதிசக்திவாய்ந்த தூர திருஷ்டிக் கண்ணுடி மூலம் காணமுடியாத காட்சிகளை, பத்துமடங்கு அதிகமாகக் காண்பிக்கும். சந்திரனின் தெரியப்படாத பாகத்தை 90 விகிதமும், நமக்குப் பார்க்கக்கூடியதாக விருக்கும் பாகத்தை 80விகிதமும் தெளிவாகக் காட்டும். இத்தகவலை தேசியவிமானவியல் விண்வெளி நிர்வாகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் திங்கட்கிழமைவெளியிட்டனர். இதனுல் சந்திரனைப்பற்றி இதுகாலவரை தெரியாத பல புதிய தகவல்கள் தெரியவரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்குமுன்னர் அமெரிக்காசந்திரனைச்சுற்றிவட்டமிட அனுப்பிவைத்த செயற்கைக் கிரகங்கள் சந்திரனின் மத்திய ரேகையை ஒட்டிய பிரதேசத்தை ஆராய்தன. சந்திரனில் மனிதன் இறங்க ஏதுவான8 இடங்களைஇவை தெரிவு செய்தன

89 மணிநேரம் தொடர்ந்து பிரயாணம் செய்தபின்னர் இந்த செயற்கைக்கிரகம் 1650 மைல்உயரத்தில் சஞ்சாரம் செய்துபடங்களைப்பிடிக்கும். கணிசமான உயரத்தில் பறப்பதனுல், அம்புலியின் மேற்றகையை அகன்ற கோணத்தில் படம்பிடிக்க இக்கருவிக்கு வசதியாயிருக்கும் முன்னர் ஏவப்பட்ட கோள்கள் குறுகிய உயரத்தில் சந்திரனை வட்டமிட்டமையினுல் அகன்ற கோணப் படங்கள் கிடைக்கமுடியவில்லை.

சந்திரனில் குழிபறித்து ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கும் சேர்வேயர் மூன்றை புதிதாக அனுப்பப்படவிருக்கும் செயற்கைக்கிரகம் கண்காணிக்கமாட்டாது. அக்கருவி 'புயற்சமுத்திரம்' என்றபகுதியில் செயற்படுகிறது.

## 'வெளியார் ஆக்கிரமிப்பை பாகிஸ்தான் நசுக்கும்'

### அயூப்கான் உறுதி

கராச்சி, மே 3

வெளிநாட்டவரின் ஆக்கிரமிப்பை நசுக்கும் வல்லமையை இப்போது பாகிஸ்தான் கொண்டுள்ளதாக பாகிஸ்தான் ஜனதிபதி அயூப்கான் அறிவித்துள்ளார்.

உள்ளூர் பழங்குடி மக்கள் மத்தியில் பேசுகையிலேயே ஜனதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமெரிக்கா ராணுவ உதவியை நிறுத்தியது குறித்து நாட்டு மக்கள் மனக்குழப்பம் அடைந்துவிடக்கூடாது என்றும் உறுதியுடன் செயலாற்ற வேண்டும் என்றும் அவர் எடுத்துக் கூறினர்,

இந்திய

## ஜனதிபதி தேர்தல்

புதுடில்லி, மே3

இந்திய ஜனதிபதிதேர்தல் முடிவு இம்மாதம் 9ந் திகதி அறிவிக்கப்படும். அதாவது வாக்குப்பதிவுமுடிந்துமூன்று நாட்களுக்குப்பின் முடிவு அறிவிக்கப்படும்.

உபஜனதிபதி தேர்தல் முடிவு இம்மாதம் 6-ந் திகதியே அறிவிக்கப்படும்.

## விமானத்துடன் கழுகு மோதியது

கல்கத்தா, மே3

சென்னைக்குப் புறப்பட்ட இந்திய 'ஏர்லைன்ஸ் கார்ப்பரேஷனின் காரவெல்' விமானம் மீது அது புறப்பட்ட சிறிது நேரத்தில் ஒருகழுகு மோதியது. அதனுல் விமானம் சேதமடைந்தது. பிரயாணிகள் சிப்பந்திகள் எவருக்கும் காயமேதுவும் ஏற்படவில்லை.

## 'எல்லையில் அபாயம்'

### இந்தியதுணைஅமைச்சர் அறிவிப்பு

ராய்ப்பூர், மே3

இந்தியாவின் எல்லைகளில் 1962ம் வருடத்தில் சீனஎவ்வளவு படைகளைக் குவித்திருந்ததோ அதைப்போல் இரண்டுமடங்கு படைகளை இப்போதுகுவித்திருக்கிறது. பாகிஸ்தான் 1965-ல் குவித்திருந்த படைகளைப்போல் இரண்டுமடங்கு படைகளைக் குவித்திருக்கிறது. இரண்டு நாடுகளும் தனித்தனியாகவோ கூட்டாகவோ இந்தியாவைத் தாக்க சமயம்பார்த்துக்கொண்டிருக்கின்றன.'

இவ்வாறு மத்திய உள்துறை துணை மந்திரி திரு. வி.ஸி.சுக்லா தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர் கிளப் ஒன்றிலேயே இதனை அவர் வெளியிட்டார்.

எந்த ஆக்கிரமிப்பையும் அது தனித்தனியாக வந்தாலும் சரி, கூட்டாக வந்தாலும்சரி சமாளிக்க இந்திய அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினர்.

மக்கள் ஐக்கியத்துடன் இருக்கவேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

## தூரகிழக்கில் பிரிட்டிஷ் துருப்புகள்

### குறைக்கப்படும்

லண்டன், மே 3

பிரிட்டிஷ் பாதுகாப்பு மந்திரி திரு. டெனிஸ் ஹீலே நேற்று முன்தினம் மக்கள் சபையில் விடுத்த அறிக்கை ஒன்றில் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் தூரகிழக்கிலுள்ள பிரிட்டிஷ் துருப்புகளின் தொகையில்20,000 வீரர்கள் வரை குறைக்கப்படுவது சாத்தியமெனத் தெரிவித்தார்.

சமீபத்தில் சிங்கப்பூரிலும், கோலாலம்பூரிலும் சிங்கப்பூர், மலாசிய அரசாங்கங்களுடன் நடத்திய பேச்சு வார்த்தைகள் சம்பந்தமாக அவர் எடுத்து விளக்கினர். அடுத்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் மேலும் படைகளைக் குறைப்பது பற்றியும் தாம் இந்த அரசாங்கங்களுடன் பூர்வாங்கப் பேச்சுக்களை அவர் நடத்தியதாகக் எடுத்துரைத்தார்.

## ஐரோப்பிய பொதுச் சந்தையில் பிரிட்டன் சேரமுடிவு

### வில்சன் விளக்கம்

லண்டன், மே3

ஐரோப்பிய பொதுச் சந்தையில் பிரிட்டன் சேர்ந்துகொள்வதென முடிவு செய்துள்ளது. இது சம்பந்தமான அரசாங்கத்தின் தீர்மானத்தை பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் நேற்று பார்லிமெண்டில் விளக்கிக் கூறினர்.

ரோம் ஒப்பந்தம் அவசியமான திருத்தங்களுடன் ஏற்றுக் கொள்ளப்படுமெனவும் ஐரோப்பிய பொதுச்சந்தையில்பிரிட்டன் சேர்வதென்ற முடிவு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததெனவும் திரு, வில்சன் மேலும் தெரிவித்தார். இந்த சந்தர்ப்பத்தில் காமன்வெல்த் நாடுகளின் நலன்கள் பாதுகாக்கப்படுவது அவசியம் எனவும்அவர் எடுத்துக்கூறினர்.

அரசாங்கத்தின் இவ்வித முடிவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஹீத் வரவேற்றுப் பேசினர்.

### அமெரிக்கா வரவேற்பு

ஐரோப்பிய பொதுச்சந்தையில் பிரிட்டன் சேர்ந்துகொள்வதென செய்துகொண்டுள்ளமுடிவுவரவேற்கப்படத் தக்கதெனவும் ஐரோப்பிய நாடுகளின் ஐக்கியத்தை வலுப்படுத்தஎடுக்கப்பட்டுள்ள முதல் நடவடிக்கை இது எனவும் அமெரிக்கா அபிப்பிராயம் வெளியிட்டுள்ளது.

பிரான்சைத்தவிரஐரோப்பிய பொதுச்சந்தையில் சேர்ந்துள்ள மற்ற அங்கத்துவநாடுகள் பிரிட்டனின் இவ்விதமுடிவை வரவேற்றுள்ளன

'தொழிலாளர்

## அரசியலில் சிக்காது பிரச்னைகளைத் தீர்க்கவேண்டும்'

யாழ்ப்பாணம், வியாழன்

"தொழிலாளரும் தொழில் சங்கங்களும் அரசியல் கட்சிகளின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தப்படுவதுடன் அரசியல் கட்சித் தலைவர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றவும் பயன்படுத்தபடுகின்றனவே தவிர தொழிலாளர்களின் உரிமைகளைப் பெறும் விஷயத்தில் பெரும் ஏமாற்றமேயடைகின்றனர். இதனுல் தொழிலாளர்களும் தொழிற் சங்கங்களும் அரசியலில் சிக்கிவிடாமல் தங்கள் பிரச்னைகளை தாங்களே ஒன்றுபட்டு தீர்த்துக் கொள்ளவேண்டும்."

இவ்வாறு ஐக்கிய இலங்கை ஸ்தலஸ்தாபன தொழிலாளர் சங்க யாழ். மாவட்டக்கிளைத்தலைவர் திரு. இ. ஐயம்பிள்ளை திருநெல்வேலியில் நடைபெற்ற மேதின விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் ஐக்கிய இலங்கை ஸ்தலஸ்தாபன தொழிலாளர் சங்க மாவட்டக்கிளையில் 15 கிளைச்சங்கங்கள் அங்கம் வகிப்பதாகவும் இவைகள் எந்த அரசியல் கட்சிச் சார்பற்றதாகவும். தொழிலாளர்களின் நலவுரிமைகளைப்பேணிப் பாதுகாப்பதில் மிகவும் முன்னணியில் விளங்குவதாகவும் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்டப் பிரதிநிதி திரு. க. குமாரசாமி பேசுகையில் தொழிலாளர் தம் உரிமைகளைப்பெற போராட வேண்டியேற்படும் என்றும் வாழ்க்கைச் செலவு அதிகரித்து வரும் இந்த நேரத்தில் தொழிலாளர் அரசியல்கட்சி தொடர்பற்றவர்களாக ஒன்றுபட்டு ஒரே அணியில்திரளவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இலங்கைக் கர்ப்புறுதிக் கூட்டுஸ்தாபனவேலை நிறுத்தத்தைச் சமரசமாகத் தீர்த்து வைக்கவேண்டும்.

அரிசி வெட்டினுல் தொழி

[4-ம் பக்கம் பார்க்க]

## ஐ. நா. கருத்தரங்கில் இலங்கை

லண்டன், மே 3

லண்டனில் நடைபெறும் ஐ.நா கருத்தரங்கு ஒன்றில் இலங்கை உட்பட 36 நாடுகள் பங்குபற்றி வருகின்றன. சரக்குகளைப் பெருமளவில் இடம் நகர்த்துவதற்கு கொள்கலங்கள் மற்றும் சாதனங்களை உபயோகிக்கும் நன்மைகள் பற்றி இக் கருத்தரங்கில் ஆராயப்படுகிறது.

திட்டம், போக்குவரத்து மற்றும் பொருளாதார சேவைகளில் முக்கிய பொறுப்பு வகிக்கும் சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகள் பங்குபற்றும் இக்கருத்தரங்கில் சர்வதேச நிபுணர்கள்பலர் உரை நிகழ்த்துகிறார்கள். நேற்று முன் தினம் ஆரம்பமான இந்தக் கருத்தரங்கு இம்மாதம் 12-ந்திகதி வரை நடைபெறும்.

## 'பாரதத்துடன் உறவு கொள்வதில் பாகிஸ்தான் காட்டும் அசிரத்தை

### பாரத வெளியுறவு மந்திரி கருத்து

புதுடில்லி, மே 3

'பாரதத்துடன் நல்லுறவு வைத்துக் கொள்வதில் பாகிஸ்தான் அக்கறை கொண்டிருக்கவில்லை' என பாரத வெளியுறவு மந்திரி திரு. சக்ளா தெரிவித்துள்ளார்.

இந்தியன் யுனைட்டட் செய்திஸ்தாபனத்துக்குஅளித்த பேட்டியொன்றின் போதே திரு. சக்ளா மேற்கண்டவாறு அபிப்பிராயம் தெரிவித்தார்.

பாகிஸ்தான் ஜனதிபதி அயூப்கான் தெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கை இதனை வெளிப்படையாக்கியுள்ளது எனவும். காஷ்மீர் பிரச்னையைத் தீர்க்க சம்மதித்தாலேயே பிறகு மற்றப் பிரச்னைகள் பற்றிப் பேசித் தீர்க்கலாம் என அவர் தெரிவித்துள்ளது நல்லுறவை வளர்ப்பதற்கு உதவுவதாக இல்லையெனவும் திரு. சக்ளா மேலும் தெரிவித்தார்.

இவ்வித நிலை இருந்த போதும் சமரச முயற்சிகை விடப்பட்டு விடவில்லையெனவும் பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்த பாரதம் எப்போதும் தயார் என்றும் அவர் எடுத்துக் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மாவட்டசபையை விரைவில் கொண்டுவருக"

## உடுப்பிட்டி கி. சபை கோரிக்கை

உடுப்பிட்டி, புதன்

உடுப்பிட்டி கிராமசபையின் மாதாந்தக் கூட்டம் உப தலைவர் திரு. வ. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

வல்வெட்டித்துறை சம்பவத்தில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியான திரு. ஆர். சிவஞானசுந்தரம் என்னும் இளைஞரின் குடும்பத்தவர்கட்கு அனுதாபம் தெரிவிப்பதென்ற 10-ம் வட்டார உறுப்பினர் திரு. செ. ஈஸ்வரலிங்கப் பெருமானின் பிரேரணையும், மாவட்டசபையைக்காலம் தாழ்த்தாது நடைமுறைக்குக் கொண்டுவருமாறு அரசாங்கத்தைச்சபை கோரவேண்டுமென்ற 2-ம் வட்டார அங்கத்தவர் திரு. பி. கே. குலசிங்கத்தின் தீர்மானமும், உடுபபிட்டி கிராமசபையின் இலவச ஆயுள்வேத வைத்திய சாலைக்குப் பணியாளர் ஒருவரை நியமிப்பதென்னும் தீர்மானமும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

யாழ். ஆஸ்பத்திரி

# தொலைபேசிஇயக்குநர் திண்டாட்டம்

யாழ்ப்பாணம், வியா.

கடந்த ஒரு வாரகாலமாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி தொலைபேசி இயக்குனர்கள் பெரும் திண்டாட்டத்துக்குள்ளாகியுள்ளார்கள். தொலைபேசி இணைப்புகளில் ஏற்பட்ட பழுதே இதற்குக் காரணமென்த் தெரிகின்றது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் உள்ள பன்னிரண்டு தொலைபேசி இணைப்புக்களில் ஏழு இணைப்புக்கள் கடந்த ஒரு வாரகாலமாக பழுதடைந்துவிட்டனவாம். இதன் காரணமாக மிகுதி 5 இணைப்புக்கள் மாத்திரம் தற்போது சேவை செய்யக்கூடிய நிலையிலிருக்கின்றனவாம். யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு 6 தொலைபேசி எண்கள் இருப்பதால் வெளியிடத்துச் சேவைக்குக் கூட தற்போது இயங்கும் 5 தொலைபேசி இணைப்புக்களும் போதாமலிருக்கின்றதாம். இந்த நிலையில் ஆஸ்பத்திரிக்குள் வார்ட்டுகளுக்கும், டாக்டர்களுக்கும், விடுதிகளுக்கும், அலுவலகங்களுக்குமுள்ள 80 தொலைபேசிச் சேவைகளை[illegible]வாறு வழங்குவது என்பது தற்போது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி தொலைபேசி இயக்குனர்களுக்கும்பெரும் பிரச்சினையை உண்டுபண்ணியுள்ளது. ஆஸ்பத்திரிக்கு வரும்''நெடுந்தூர'' தொலைபேசித் தொடர்புகள் இணைக்கப்பட்டுள்ள வேளையில் ஆஸ்பத்திரிக்குள் கொடுக்கப்பட வேண்டிய தொலைபேசிச் சேவைகளை உடனுக்குடன் வழங்க முடியாதிருப்பதால் பல சந்தர்ப்பங்களில் தொலைபேசி இயக்குனர்கள் ஆஸ்பத்திரி மேலதிகாரிகளின் கண்டனங்களுக்கு இலக்காக வேண்டியுள்ளதாம். இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பல தடவைகள் தொலைபேசி இயக்குனர்கள் தெரிவித்தும் கூட அவர்கள் எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லையாம். நிலைமை இப்படியே இருந்துவருமானல், வெளியிடங்களிலிருந்து வரும் தொலைபேசிச் சேவைகளும், ''நெடுந்தூர'' தொலைபேசிச் சேவைகளும், ஆஸ்பத்திரிக்கு இணைக்கப்படாமல் துண்டிக்கப்படக் கூடிய ஒரு சூழ்நிலை உருவாகலாமெனத் தெரிகின்றது.

[ந. நி]

## பிரிவுபசாரம்

புன்னுக்கட்டுவன், புதன்

கட்டைவேலி ஞானசாரியா கல்லூரி உடற் பயிற்சி ஆசிரியர் திரு.கே. கார்த்திகேச வடமராட்சிப் பகுதி உடற்பயிற்சியாளவாக வேறு இலாகாவுக்கு மாற்றப்பட்டதைத் தொடர்ந்து கல்லூரி அதிபர் திரு.சி.சிவப்பிரகாசம் தலைமையில் அவருக்கு ஒரு பிரிவுபசாரக் கூட்டம் நடைபெற்றது.

## வாலிபர் தற்கொலை

சாவகச்சேரி, புதன்

வாலிபர் ஒருவர் நோய் காரணமாகத் தற்கொலை செய்து கொண்ட பரிதாபகர சம்பவமொன்று சாவகச்சேரிப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த மீசாலை என்னுமிடத்தில் நிகழ்ந்துள்ளது.

கு. அப்பாதுரை என அழைக்கப்படும் வாலிபரே தற்கொலை செய்து நபராவர். இவர் தொய்வு நோயால் அவதிப்பட்டாரென்றும் இதன் காரணமாகவே தற்கொலை செய்து கொண்டாரென்றும் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரிப் பொலிஸாரின் உதவியுடன் ஸ்தலத்தில் மரண விசாரணை நடாத்திய மரண விசாரணை அதிகாரி திரு.எஸ்.கே.திரவியநாயகம்விசாரணைமுடிவில் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

பருத்தித்துறை

## பஸ்சேவை சீரமைக்கப்படும்

உடுப்பிட்டி, புதன்

பருத்தித்துறை-யாழ்ப்பாணம் இ. போ. ச.பஸ்சேவை விரைவில் சீரமைக்கப்படவிருக்கிறது. தற்பொழுது மாற்றியமைக்கப்பட்ட இப்பிராந்திய பஸ்சேவைமீது அதிருப்தி தெரிவித்துப் பொதுமக்கள் தேசியசேவை அமைச்சர் திரு. வி.ஏ. சுகததாசாவிடம் முறையிட்டதைத்தொடர்ந்து கூடிய சீக்கிரம் பஸ்சேவையைத் திருத்தியமைக்குமாறு உத்தரவிடவிருப்பதாக உடுப்பிட்டி எம். பி, திரு. மு. சிவசிதம்பரத்திடம் அமைச்சர்உறுதியளித்துள்ளதாகத் தெரியவருகிறது.

## 'நீதிராஜாவை நியமிக்குக'

யாழ்ப்பாணம், வியா.

ஆனைக்கோட்டை சாவல்கட்டு கி.மு. சங்கத்தினதும் மகாத்மா சனசமூக நிலையத்தினதும் மாதாந்தக் கூட்டத்தில், செனட்சபையில் காலியாகும் ஸ்தானத்திற்கு வர்த்தகரும், சமூகசேவையாளருமான திரு.ரி. நீதிராஜாவை நியமிக்கும்படி, பிரதம மந்திரியையும், ராஜாங்க அமைச்சர் திரு.ஜே.ஆர் ஜயவர்த்தனவையும் கோருவதென்ற தீர்மானம் ஏகமனதாகநிறைவேறியது. சங்கத்தலைவர் திரு. அம்பிகாபதி தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

## பார்வையாளர்கள்

ஊர்காவற்றுறை, புதன்

ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலையின் உத்தியோகப் பற்றற்ற பார்வையாளர்களாக திரு. பி. இம்மனுவல், திரு. எஸ். செபஸ்தியன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## கயரோகக் கட்டுரைப் போட்டி

யாழ்ப்பாணம், வியாழன்

இலங்கை கயரோக நிவாரண தேசியசங்க வலிகாமம் கிளை இவ்வருடம் தனது 10 வது ஆண்டு நிறைவு விழாவை மிக விரிவாக நடாத்தவிருக்கின்றது. இதனை முன்னிட்டுப் பலவித கயரோகப் போட்டிகளை நடாத்தவிருக்கிறது. கயரோக அறிவு எழுத்துப் போட்டி, கயரோகக் கட்டுரைப்போட்டி, கயரோகச் சித்திரப்போட்டி, நாடகப்போட்டி முதலிய பத்து விதப் போட்டிகள் நடத்தவும், போட்டிகளில் அதிக புள்ளிகள் பெறுபவர்க்கு வெள்ளிக் கிண்ணங்களும், பதக்கங்களும், புத்தகங்களும், மற்றும் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கவும் சங்கம் ஒழுங்குகள் செய்துள்ளது. இதுபற்றிய முழு விபரங்களுமடங்கிய சுற்றறிக்கை வலிகாமம் மேற்கிலுள்ள சகல கல்லூரிகள், பாடசாலைகளுக்கும், மாதர் முன்னேற்றச் சங்கங்கள், கிராம முன்னேற்றச்சங்கங்கள், சனசமூக நிலையங்கள் போன்றவற்றுக்கும் வைத்தியசாலைகட்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## சமய அறிவுப்போட்டி

கோப்பாய், புதன்

வைகாசி மாதத்தில் நடைபெறவிருக்கும் திருஞானசம்பந்தர் குருபூசைதினத்தை முன்னிட்டு கோப்பாய் திருவருள் தவநெறிமன்றத்தாரால் சமய அறிவுப்போட்டி ஒன்று நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## இலங்கை ஒலிபரப்பு கூட்டு ஸ்தாபனம்

### வியாழன் 4 - 5 - 67

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

**844 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல்12-00சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நேயர்விருப்பம்.

இரவு 6-15 தமிழோடிசை பாடல், 6-30 பேச்சு, 6-45 கிராமசஞ்சிகை, 7-15 தாள வாத்தியக்கச்சேரி, 7-45 நாடகம் — தர்மசங்கடம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைக்கச்சேரி — பாலமுரளி கிருஷ்ண

## அரசியலில்...

[3- ம் பக்கத் தொடர்ச்சி]

லாளர் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதால் முன்பு வழங்கியதுபோல 2 படி அரிசி வழங்க வேண்டும்.

அரசாங்க சேவையிலுள்ள சிறு ஊழியர்களுக்கு அரசாங்கம் வழங்கும் சலுகைகள்போல ஸ்தலஸ்தாபன தொழிலாளருக்கும் வழங்க வேண்டும்.

ஸ்தலஸ்தாபனங்களில் வேலைசெய்யும் தற்காலிக தொளிலாளர்களை நிரந்தரமாக்கி ரூபா ஐம்பது அடிப்படைச் சம்பளம் வழங்க வேண்டும்

ஸ்தலஸ்தாபன தொழிலாளருக்கு வீடு வசதியற்ற பகுதிகளில் வீட்டு வசதிகள் செய்து கொடுக்கவேண்டும்.

கூட்டத்தில் திருவாளர்கள் சி. முருகன், க. மாணிக்கம், ஆ. சோமு, நீ. ஆசீர்வாதம், அ. சின்னத்தம்பி ஆகியோரும் பேசினர்.

# 20,000 ரூபாவரை அரசாங்கத்துக்கு சிரமதான மூலம் லாபம்

பண்டத்தரிப்பு, புதன்

இளவாலை-மாரீசன் கூடல் சனசமூக நிலையத்தினராலும், பொதுமக்களாலும் மாரீசன் கூடல் பிரதான வீதி திருத்த வேலை சிரமதான முறையில் ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வேலைகளினல் அரசாங்கத்திற்குச் சுமார் இருபதிணுயிரம் ரூபர வரை லாபம் கிடைக்கும்.

வலிகாமம் மேற்குக் காரியாதிகாரி திரு.என்.மாணிக்கம்நடராஜா பெரியவிளான் கிராம சேவையாளர் திரு. எஸ். சுந்தரமூர்த்தி ஆகியோர், சிரமதானப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மேற்கண்ட சனசமூகநிலையத்தில்வைத்து மாவு அன்பளிப்புச்செய்தனர்.

சாதாரண ஒருவருக்கு நாள் ஒன்றிற்கு 14 அவுன்ஸ் வீதமும், விவாகமானவர்களுக்கு 28 அவுன்ஸ் வீதமும், இரு பிள்ளைகளுக்கு மேலுள்ளவர்களுக்கு 3 1/2 ருத்தல் வீதமும் மாவு வழங்கப்பட்டது. இதன்படி சிலருக்கு ஒரு மூடை மாவும் கிடைத்தது.

30 மூடை மாவில் 8 மூடை மா மட்டுமே இதுவரை வழங்கப் பட்டது. படிப்படியாக மிகுதியும் வழங்கப்படும்.

# பொலிசாரைக் கண்டதும் ஒட்டம் பிடித்த மூவர்

## மூன்றுமைல் ஓடியும் முயற்சி பலிக்கவில்லை

பலாலி, புதன்

சந்தேக நபர்களான மூவரை காங்கேசன்துறைப் பொலிசார் மூன்று மைல் தூரம் துரத்திப் பிடித்த சம்பவம் இன்று காங்கேசன்துறையில் நடந்தது.

பருத்தித்துறையில் கைக்குண்டு வீசியதாகப் பொலிசாரால் தேடப்பட்டு 6 நாட்களாக பொலிசாருக்கு 'டிமிக்கி' கொடுத்து வந்த மூவர் இன்று காலை காங்கேசன்துறையில் பொலிஸ் ஜீப்பைக் கண்டதும் ஓட்டம் பிடித்தனராம்.

ஜீப்பில் சென்ற பொலிசார் அவர்களைத் துரத்தத் தொடங்கினுர்கள். காங்கேசன்துறை சுங்கப்பகுதியிலிருந்து மூன்று பேர்களும், மூன்று பாதையில் சுமார் மூன்று மைல் தூரம் ஓட்டம் பிடித்தனராம்.

சப் இன்ஸ்பெக்டர் செல்லையா, சார்ஜன்ட் எம். பி. வேலு, கான்ஸ்டபிள்களான இரத்தினம், சமரசிங்கா ஆகியோர் கடைசியில் வெகு சிரமப்பட்டு மூவரையும் பிடித்தனர் என்று கூறப்படுகிறது.

செல்வராசா ஜெயபாலன், செல்வநாயகம் லட்சுமிகாந்தன், கணபதிப்பிள்ளை தங்கவேலு ஆகிய மூன்று சந்தேக நபர்களும் ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் பற்றி பொலிசார் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர்.

## மாணவரிடையே போட்டி

### அரசாங்கம் நடத்தும்

புன்னலைக்கட்டுவன், புதன்

வனவாழ்வு பற்றிய அறிவை மாணவரிடையே வளர்ப்பதற்காக, கல்வி இலாகா அகில இலங்கை ரீதியில் போட்டி ஒன்றை நடாத்த விருக்கிறது. இடம், காலம் பற்றி அறிவிக்கப்படவில்லை.

'வில்பத்து தேசீயப் பூங்காவுக்கு விஜயம்' 'எனது தோட்டத்துப் பறவைகள்' 'இலங்கை யானைகள்' என்னும்விஷயங்களில் ஒன்றைப் பற்றி 14 வயதுக்குட்பட்டவர்களும், 18 வயதுக்குட்பட்டோர் 'வனவாழ்க்கைக்கு இலங்கையில் போதிய இடவசதியுண்டா?' அல்லது 'இலங்கையிலுள்ள தேசீய பூங்காக்கள், பற்றியும் அல்லது 'இந் நாட்டில் வனவாழ்வின் பொருளாதார முக்கியத்துவம்' பற்றியும் எழுதக் கோரப்படுவர்.

14 வயதுக்குட்பட்டோருக்கு முதல் பரிசு ரூபா 100-ம், இரண்டாம் பரிசு ரூபா 50 ம், அத்துடன் யாள தேசியபூங்காவைப் பார்வையிட இலவச வசதியும் அளிக்கப்படும். 18 வயதுக்குட்பட்டோருக்கு முதற் பரிசு ரூபா 250 ம், இரண்டாம் பரிசு ரூபா 100 ம் வழங்கப்படும்.

## ஆசிரியருக்கு பிரியாவிடை

புன்னலைக்கட்டுவன், புதன்

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் விளையாட்டு ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. எஸ். கதிர்காமத்தம்பி, உடற்பயிற்சி உத்தியோகத்தராக மன்னுருக்கு மாற்றப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி வித்தியாலய ஆசிரியர் சங்கம் ஒரு பிரிவுபசாரக் கூட்டத்தை நடாத்தியது. திரு. ஏ. தாமோதரம்பிள்ளை தலைமை தாங்கினர்.

## அநுராதபுர ஆஸ்பத்திரியில் சிரமதானம்

அநுராதபுரம், புதன்

அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் 10 நாள் சிரமதான வேலை நாளை ஆரம்பிக்கப்படவிருக்கிறது. சுகாதார உதவி மந்திரி திருமதி விமலா கன்னங்காரா இதனை ஆரம்பித்து வைப்பார்.

ஆஸ்பத்திரிக் கட்டடத்தைத் திருத்தும்வேலை, வர்ணம்பூசும்வேலை ஆகியன சிரமதானமூலம் செய்யப்படும். இவ்வித சிரமதான வேலையால் 50 ஆயிரம் ரூபா வரைமிச்சப்படுத்தலாம்என எதிர்பார்க்கப்படுகிறது.

## பாம்பு தீண்டி சிறுவன் மரணம்

சாவகச்சேரி, புதன்

விஷப் பாம்பு தீண்டியதால் ஒரு சிறுமி ஸ்தலத்திலேயே மரணமான பரிதாபமான சம்பவம் ஒன்று சாவகச்சேரியைச் சேர்ந்த மிருசுவில் என்னுமிடத்தில் நிகழ்ந்துள்ளது.

கமலாம்பிகை என அழைக்கப்படும் 13வயதுச் சிறுமியே இப்பரிதாப மரணத்துக்குள்ளானவர்.

## ஆண்டு விழா

உடுப்பிட்டி, புதன்

நவிண்டில் நாவலன் விளையாட்டுக்கழகத்தின் 10-வது ஆண்டு நிறைவு விழாவும் இல்லங்கட் கிடையேயான விளையாட்டுப் போட்டிகளும் கழக மைதானத்தில் திரு. க. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. பருத்தித்துறை வைத்திய அதிகாரி டாக்டர் ஆ. சோமசுந்தரமும், பாரியாரும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். திருமதி சோமசுந்தரம் போட்டிகளில் வெற்றியீட்டியவர்கட்குப் பரிசில்களை வழங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

# அறிவித்தல்

இலங்கைச் சட்ட ஆக்கங்களின் [அத்தியாயம் 158] நிறுவை அளவைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 32 [2], [3]ன் கீழ் சகல வியாபாரிகளுக்கும் கீழ் வரும் பகிரங்க அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

நிருபணத்திற்கான அதிகார அடையாளங்கொண்டு பரிசோதகரால் முத்திரையிடப்படாத நிறுவையோ அல்லது அளவையோ அல்லது நிறுவை அல்லது அளவை கருவிகளையோ யாராவது நபர் விற்றாலோ அல்லது விற்பனைக்காகக் காட்சிக்கு வைத்தாலோ அல்லது நிருபணத்திற்கான அதிகார அடையாளங் கொண்டு 12 மாத கால எல்லைக்குள், பரிசோதகரால் முத்திரையிடப்படாத, ஏதாவது நிறுவையோ அல்லது அளவையோ அல்லது நிறுவை அல்லது அளவை கருவியையோ ஏதாவதொரு வியாபாரத்தித்தில் இவைகளை எந்த நேரத்திலாவது பாவிப்பிற்காக தன்னிடம் வைத்திருந்தால், இலங்கைச் சட்ட ஆக்கங்களின் [அத்தியாயம் 158] நிறுவை அளவைக் கட்டளைச் சட்டத்தின்பிரிவு 41ன்கீழ் அவர்ஓர் குற்றம் புரிந்தவராகக் கருதப்பட்டு ரூபா 100/-க்கு மேற்படாத அபராதமும், மூன்றுமாத காலத்திற்கு மேற்படாத சிறைத்தண்டனையும், இரண்டில் ஒன்றும் அல்லது அபராதமும்சிறைத் தண்டனையும் விதிக்கப்படுவதற்கு ஏதுவாய் இருப்பார்.

போயா தினத்திற்கு முந்திய நாள், போயாதினம், பொதுவிடுமுறை நாட்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் பிற்பகல் 2 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரையும் நிறுவை அளவைக் கருவிகளுக்கு மாநகரசபை அலுவலகத்தில் முத்திரையிட்டுக் கொடுக்கப்படும்.

1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 30.ம் திகதிக்கு முன்னர் வியாபாரிகள் தங்கள் நிறுவை அளவைக் கருவிகளுக்கு முத்திரை பொறித்துக் கொள்ள வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் முத்திரை இடத் தவறியவர்கள்மீது சட்டப்படி வழக்குத் தொடரப்படும்.

1X10Y2 க. செல்வராசா
ஆணையாளர்,

யாழப்பாணமாநகரசபை'
மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
18-4-67. 1766

## இடமாற்றம் ரத்து

ஊர்காவற்றுறை, புதன்

கரம்பன் சண்முகநாத மகாவித்தியாலயத்திலிருந்து ஆறு ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டதை எதிர்த்து தீவுப்பகுதி எம். பி. திரு. வி. நவரத்தினமும், நாரந்தனைகல்விச்சபைக்குழுவும் தனிப்பட்டவர்களும் ஆட்சேபம் தெரிவித்ததைத் தொடர்ந்து இவ்விடமாற்றங்கள் ரத்துசெய்யப் பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

## எதிரிக்கு நன்னடத்தை

ஊர்காவற்றுறை, புதன்

காரைநகரைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு. அம்பலவாணர் குலநாயகம் என்பவரைத் தாக்கியதான வழக்கில் மாதகல் வாசியான இராமலிங்கம் செல்லத்துரை என்பவருக்கு ஊர்காவற்றுறை நீதிபதி திரு. ஜமீல் ஆறுமாத நன்னடத்தைப் பிணையில் செல்ல உத்தரவிட்டார்.

# 'மணல் ஒழுங்கையில் இறந்தவரது சடலம் கிடந்தது'

## சரசாலை கொலை வழக்கில் இன்ஸ்பெக்டர் சாட்சியம்

சாவகச்சேரி, புதன்

''அதிக ஆழமான புழுதி நிலத்தில் நான் சைக்கிள் ஓடமாட்டேன். புழுதியில் சைக்கிள் ஓடி அனுபவமுடையவர்கள் ஓட முடியும்.''

சரசாலை கொலைவழக்கு நான்காவது தவணையாக நேற்று சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோது சாட்சியமளித்த சாவகச்சேரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. விஜயதிலகாவை எதிரி தரப்பு சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் குறுக்குவிசாரணை செய்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வருடம் பெப்ரவரி 19-ம் திகதி சரசாலையில் ஐந்து பிள்ளைகளின் தந்தையான கந்தையா சிவகுரு என்பவரை அதே ஊரைச் சேர்ந்த செல்லத்துரை பேரம்பலம் என்பவர் கத்தியால் வெட்டிக் கொலை செய்ததாக சாவகச்சேரிப் பொலிசாரால் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

எதிரி சார்பில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ. ஸி., பாரிஸ்டர் எம். சிவானந்தன். அட்வகேட் எஸ். சுந்தரலிங்கம், புரக்டர்கள் எஸ். கே திரவியநாயகம், வி. செல்லத்தம்பி, வி. கனகசபை ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார்.

வழக்காளி தரப்பில் அட்வகேட். திரு. ரி. தம்பித்துரை, புரக்டர்கள் ஆர். டி. சிவகுரு, சி. பாலகிருஷ்ணன் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார்.

இவ்வழக்கு விசாரணையைப் பார்க்க நீதிமன்றத்தின் உள்ளும் புறமும் பெருந்திரளானோர் திரண்டிருந்தனர்.

இன்ஸ்பெக்டர் திரு. விஜயதிலகா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

இவ்வருடம் பெப்ரவரி 19-ம் திகதி இரவு 8-30 மணியளவில் சாட்சியான கே. தருமலிங்கம் பொலிஸ் நிலையத்துக்கு வந்து கொலை பற்றிய தகவலைத் தந்தார்.

இரவு 8-15 மணிக்கு நான் இவருடன் சம்பவ இடத்துக்குப் போனேன். அங்கு ஒருமணல் ஒழுங்கையில் இறந்தவரது சடலம் இடப்பக்கம் திரும்பியபடி கிடந்தது. இறந்தவரது இருகைகளும் வலப்பக்கமாக இருந்தன. அவரது வலது கையிலும் மார்பிலும் கழுத்தின் முற்பக்கத்திலும் வெட்டுக் காயங்கள் காணப்பட்டன. மூக்கு வாய் ஆகியவற்றிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

எதிரியின் வீட்டுப் படலைக்கு அருகாமையிலேயே இறந்தவரது சடலம் கிடந்தது. அவ்விடத்திலிருந்து சுமார் 60 யார் தூரத்தில் இருந்த சைக்கிளின் கைப்பிடியிலும் டைனமோவிலும் இரத்தக்கறை படிந்திருந்தது.

இறந்தவரின் மனைவி எதிரிக்குச் சொந்தமான தென ஒரு பசு மாட்டை எனக்குக் காண்பித்தார். நான் சாட்சிகளின் வாக்குமூலங்களைப் பதிவு செய்தேன்.

இறந்தவரின் மகள் சரஸ்வதி, ரசாயனப்பரிசோதகர் திரு. எம். குமாரசாமி ஆகியோரும் சாட்சியமளித்த பின் மேல்விசாரணை இம் மாதம் 13-ம் திகதிக்குஒத்தி வைக்கப்பட்டது.

## குறுகிய கால நீர்ப்பாசன திட்டம்

கொழும்பு, புதன்

பெரும் விவசாயத் திட்டங்கள் நல்ல வெற்றி பெறுவதற்கு குறுகிய கால நீர்ப்பாசனத் திட்டம் உருவாக்கப்பட வேண்டுமென காணி நீர்ப்பாசன அமைச்சர் திரு. சி. பி. டி. சில்வா தெரிவித்துள்ளார்.

உணவு உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளின் கஷ்டங்களைப் போக்கும் வகையில் நீர்ப்பாசன இலாகா ஏற்ற ஒழுங்குகளை விரைவில் மேற்கொள்ள வேண்டுமென அவர் கேட்டுள்ளார். இதில் அதிக சிரத்தை கொள்ளுமாறு அரசாங்க அதிபர்களுக்கும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். விஞ்ஞான ரீதியிலான பயிர்ச்செய்கைக்கு குறுகிய காலத்திட்டங்களை செயல்படுத்துவது அவசியம் எனவும் அவர் எடுத்துக்கூறியுள்ளார்.

## நியூயார்க்கில் இந்திய-பாகிஸ்தான் காவியங்கள்

நியூயார்க், மே 3

12ம் நூற்றாண்டு முதல் இன்று வரை இந்தியாவில் உருவாக்கப்பட்ட சமஸ்கிருத காதல் காவியங்களும் பாகிஸ்தானிய காவியங்களும் நியூயார்க் சர்வகலாசாலையில் வாசிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மே 10ம் திகதி புதன்கிழமை மாலை இவ் வைபவம் நடைபெறவிருக்கிறது.

கவிதைகள் ஆங்கிலமொழி பெயர்ப்பிலிருந்தே வாசிக்கப்படும். 'மஹ்பில்' என்ற தவணைக் கால சஞ்சிகையின் இணை ஆசிரியரும், கூட்டு அமைப்பாளருமான காலோ கொப்லோ இக் கவிதைகளுக்கான தெளிவுரைகளை நிகழ்த்துவார். 'மஹ்பில்' என்ற சஞ்சிகை தெற்கு ஆசியாவின் இலக்கிய ஆராய்ச்சித் துறைக்காக சிக்காகோ பல்கலைக் கழகத்திலிருந்து வெளியிடப்படுகிறது. ஆசிய கழகத்தினதும், நியூயார்க் பல்கலைக் கலைக்கழகத்தின் கலை, விஞ்ஞானப் பட்டக் கலாசாலையினதும் 'ஆசிய இலக்கிய ஆராய்ச்சிக்கழக' இக் காவிய வாசிப்பு [illegible] பெறுகிறது.

ஊர்காவற்றுறை, புதன்

புங்குடுதீவில் உள்ள பாடசாலைகளில் 18 ஆசிரியர்களுக்கான இடங்கள் காலியாக இருப்பதாயும் நீண்டகாலமாக இக்குறைபாடு நிலவுவதாகவும் கூறப்படுகிறது.


ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
எஸ். எஸ். ஆர் - விஜயகுமாரி
நடித்த
ஆனந்தி

MANOHARA
Jaffna
Daily at 4-45, 7-00, 9-45
Clint Eastwood
Marianne Kock
in
Fistfull of Dollars
Technicolor-Techniscope

REGAL - JAFFNA
Time: 4-15, 7-00, 9-45 p. m.
Cliff Robertson
George Chakiris
in
633 SQUADRON


## வரி விளம்பரம்

### WANTED

Asst. manager. Three sales Representatives. One typist and one bill clerk. State experience and age. Aruna Agencies, Alaveddy. 2389

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, ஒரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணானந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்

### சோதிடம்

இளவாலை, சேந்தான் குளம், கீரிமலை ரோட்டில் 'பாக்கிய வாசா' இல்லத்திலிருந்து கந்தையா வயிரவப்பிள்ளை கைரேகை, குறிப்பு, ஒருவர் வசிக்கும் மனைவாசல் பலன், கல்வி, தொழில், கஷ்டநிலை, உடலில் இருக்கும் வருத்தங்களைப் பற்றியும் இலவசமாகச் சொல்லுவார். நேரில் சந்திக்கவும். ஒரு கிழமை தங்குவார். 1969

### விற்பனைக்கு

தேமஸ் [THERMOS] உதிரிப்பாகங்கள் மீண்டும் கிடைக்கின்றன. அரிய சந்தர்ப்பம். தவறவிடாதீர்கள். எஸ். சவிரிமுத்து, 73, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 1971

ஸ்கூட்டர்
VESPA 1.50 C. C. ஸ்கூட்டர் [1 SRI 4564] நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. தொண்டைமானாறு இந்து ஆங்கில பாடசாலையில் மே மாதம் எட்டாம் தேதியில் பார்வையிடலாம். இராசநாயகம். 1970

### கல்வி

வகுப்புகள்
ஜி. சி. ஈ. உயர்தரம் கலை/வர்த்தகம் விசேட பட்டதாரி ஆசிரியர்களால் வகுப்புகள் நடாத்தப்படும். விடுதி வசதிகள் உண்டு. ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி/107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 1965

## சுத்தானந்தர் ரஷ்யா செல்கிறார்

சென்னை, மே 3

கவியோகி சுத்தானந்தபாரதியார் மாஸ்கோவுக்குவிஜயம் செய்யவிருக்கிறார். இம் மாதம் 5-ந் திகதி டில்லியிலிருந்து மாஸ்கோவுக்குப்புறப்படவிருக்கிறார். சோவியத் யூனியனில் முக்கிய நகரங்களுக்குச்சென்றபின் ஒஸ்கோ லண்டன், பாரிஸ், ரோம், கெய்ரோ ஆகிய இடங்களுக்கும் செல்வார். ஜூன்மாத மத்தியில் அவர் நாடுதிரும்புவார்.

## எதிரி விடுதலை

ஊர்காவற்றுறை, புதன்

காரைநகர் வடக்கைச் சேர்ந்த ச. வேலுப்பிள்ளை என்பவர் அதே இடத்தைச் சேர்ந்த தில்லையம்பலம் சிவபாக்கியம் மீது பலாத்காரம் புரிய முயற்சித்ததாகவும் வீட்டுக்கு எறிந்து நஷ்டம் விளைவித்ததாகவும், பயமுறுத்தித் தகாத வார்த்தைகளால் ஏசியதாகவும் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கை நீதிபதி திரு. ஜமீல் தள்ளுபடி செய்தார்.


நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெமினி—சாவித்திரி
நடித்த
வல்லவனுக்கு வல்லவன்

கெப்பிட்டல் [கொட்டாஞ்சேனை] பிளாஸா [வெள்ளவத்தை] விஜயா [மட்டுநகர்]
ஸ்ரீகிருஷ்ணா [திருமலை] நவா [கொம்பனித்தெரு] மொடேர்ன் [பண்டாரவளை]

மே மாதம் 6-ம் திகதி முதல்
வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]

ரவிச்சந்திரன் - ஜெயலலிதா
ரங்கராவ் - நாகேஷ்
ஆர். சரஸ்வதி,
மனேகர்,
சீதாலட்சுமி,
மாதவி,
கள்ளபாட்
நடராஜன்
திறம்பட நடித்து
தென்னகமெங்கும்
100 நாட்களுக்கு
மேல் ஓடிய
வெற்றிச் சித்திரம்.



ஈ. வி. ஆர். பிக்சர்ஸ்
குமரிப் பெண்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்
டைரக்ஷன் ராமண்ணா


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இந்தியா திரும்புவோருக்கு புனர்வாழ்வுத் திட்டம்

## டில்லியில்கூடும் உயர்தரமகாநாடு: அண்ணுவும் கலந்துகொள்வார்

கொழும்பு, புதன்

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்கீழ் இலங்கையிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பவிருக்கும் இலங்கையிலுள்ள இந்திய வமசாவழியினருக்குப் புனர்வாழ்வளிப்பதற்கான திட்டங்களைத் தயாரிப்பதுபற்றி விவாதித்து ஆராய்வதற்கு இந்திய அரசாங்கம் உயர்தர மகாநாடொன்றைடில்லியில் கூட்டவிருக்கிறது.

இந்தமகாநாட்டில் தமிழ்நாடு முதல் அமைச்சர் திரு. சி. என். அண்ணுதுரையும் கலந்து கொள்வாரெனத் தெரிகிறது. மகாநாட்டில் கலந்துகொள்ள வருமாறு திரு. அண்ணுதுரைக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறது.

இப்பொழுது சென்னையிலிருக்கும் இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் உப தலைவர் திரு. எஸ். எம். சுப்

[2-ம் பக்கம் பார்க்க]

### சிவசேனை நடவடிக்கைகள் பற்றி சவான்

பம்பாய், மே3

மொழி அல்லது வகுப்பு அடிப்படையில் ஒரு பகுதி மக்கள்மீது தாக்குதல் நடத்துவது கண்டிக்கத்தக்கது என்றும், ஆனுல்சட்ட பூர்வமான நடவடிக்கை மட்டும் போதாது என்றும் உள்துறை மந்திரி திரு. சவான் இங்கு தெரிவித்தார்.

பம்பாய் பத்திரிகையாளர் சங்கத்தில் பேசுகையில் சிவசேனையின் நடவடிக்கைகள் பற்றிய ஒருகேள்விக்குப்பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினுர்.

எல்லாவித குறுகியபிராந்திய மனப்பான்மையும்தீயது என்றும் அதை எதிர்த்துப் போராடவேண்டும் என்றும் மந்திரி கூறினுர்.

### கார் சொந்தக். . .

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கொலை செய்தவர் சென்றதாகக் கருதப்படும் மோட்டார்காரை பொலிஸார் கைப்பற்றிப் பொலிஸ் நிலையத்தில் வைத்துஅளது தெரிந்ததே.

சம்பந்தப்பட்டகார் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டிருக்கும் இரத்தின சபாபதிக்குச் சொந்தமானதெனப் பொலிஸார் நடத்திய விசாரணையில் தேரிய வந்துள்ளது. இக்கொலை சம்பந்தமாக கணபதி கிருஷ்ணபிள்ளை என்பவரும் பொலிசாரால் தேடப்பட்டு வருகிறுர். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருக்கும் இரத்தினசபாபதி முன்னர் இரு தடவைகள் கொலைக் குற்றத்திற்காக மறியல் சென்றவர் எனப் பொலிஸ் விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

#### அரசியல் கட்சி வேறுபாடு

அரசியல் கட்சிகள் சம்பந்தமாக இரு பகுதியினருக்கிடையில் எழுந்த வாக்குவாதத்தைத் தொடர்ந்தே இச் சம்பவங்க்ள் நடந்ததாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலிலிருந்து தெரியவத்துள்ளது. மரணமான வேலன் கிட்டினனும் [24வயது] ஆஸ்பத்திரியில் கத்திக்குத்துக் காயங்களுடன் அனுமதிக்க பட்டிருக்கும்அவரதுசசோதரரும ன வேலன் நாகமணியும் [29 வயது] ஒரு கட்சியைச்சேர்ந்தவர்களென்றும், அவர்களைக் கத்தியால் குத்தியதாகக் கூதப்படும் கணபதி கிருஷ்ணபிள்ளை வேருெரு கட்சியைச் சேர்ந்த்வரென்றும், பல தடவைகள் கணபதி கிருஷ்ணபிள்ளை மரணமான கிட்டிணனையும்,காயங்களுக்குள்ளான நாகமணியையும் தனது கட்சியில் சேருமாறு கேட்டதாகவும், இதற்கு அவர்கள் மறுத்ததைத் தொடர்ந்தே,அவர்கள் கத்தியால் குத்தப்பட்டதாகவும் உதவி பொலிஸ் அதிபர் திரு.ஆர்.சி.தவராஜா நடாத்திய விசாரணையில் தெரிய வந்துள்ளதாம்.

#### ஷேர்ட் எங்கே

மரணமான கிட்டிணன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டன்னர்,அவர் கொலை செய்யப்பட்டபோது அணிந்திருந்ததாகச் சொல்லப்படும்'ஷேர்ட்டும்',அவரது கைக் கடிகாரமும் ஆஸ்பத்திரியில் களவாடப்பட்டு விட்டதாகப் பொலிஸாருக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக மரணமான கிட்டிணன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த 'வார்ட்' அட்டன்ட்டன்ஒருவர் இன்ஸ்பெக்டர்திரு.மெண்டிஸினுல் விசாரணை செய்யப்பட்டார் மரணமான கிட்டிணன் வார்ட்டில் அனுமதிக்கப்பட்ட பின்னர்,அவருக்குச் சிகிச்சை அளிப்பதற்காக வார்ட் டாக்டரின் உத்தரவின் பேரில் தான் மரணமானவரின் ஷேர்ட்டைக் கழற்றிக் கீழே போட்டதாகவும், அதன் பின்னர் அந்த ஷேர்ட்டை யார் எடுத்துச் சென்ருர்கள் என்பது தனக்குத் தெரியாதென்றும், மரணமானவர் [illegible] அனுமதிக்கப்பட்ட போது அவரது கையில் கடிகாரம் இருக்கவில்லையெனவும் அட்டன்டன்ட் விசாரணையில் தெரிவித்தாராம்.

மரணமானவரையாழ்ப்பாணம்சட்டவைத்தியஅதிகாரி டாக்டர்.எஸ். சுப்பிரமணியம் பிரேதபரிசோதனைசெய்தார். பொலிசார் தொடர்ந்து புலன்விசாரணைசெய்து வருகின்றனர். [ந. நி]

---

வடபகுதி அசைஸ் விசாரணை

## ''நில்லடா' என்றுகூறியபடி துவக்குடன் சென்றுர்''

### மூளாய் கொலை வழக்கில் சாட்சியம்

யாழ்ப்பாணம், வியா

''பொறுத்துக்கொள்வாறன் என்று கூறிவிட்டு முதலாம எதிரி வீட்டுக்குள் போனுர். இறந்த முருகேசு பேசிக்கொண்டு நின்றுர். முதலாம் எதிரி துவக்கை எடுத்துக்கொண்டு நில்லடா என்று கூறிக்கொண்டு அங்கு போனதைக் கண்டேன்.''

மூளாய் கொலைவழக்கில் முதலாம் எதிரியின் மகன், கணபதி சண்முகநாதன் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினுர். இவ்வழக்கு நேற்றுக்காலை இரண்டாவது தினமாக வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் வடபகுதி நீதியரசர் திரு. வி. தென்னக்கோன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 66ம் ஆண்டு மே மாதம் 18ம்திகதி மூளாயில் சுப்பர் முருகேசுவை சுப்பன் கணபதியும், கணபதி தெய்வேந்திரனும் கொலைசெய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் அட்வக்கேட் பி.இரகுபதி, புறக்டர் ஏ. குலநாயகத்தின் அனுசரணையுடன் ஆஜரானுர். எதிரிக்காக அரசாங்கத் தரப்பில் திரு. எஸ். தில்லையர் நியமிக்கப்பட்டிருந்தார்.

சண்முகநாதன் சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது:

நான் முதலாம் எதிரியின் மகன். இரண்டாம் எதிரி எனது தம்பி. காலஞ்சென்றவர் எனது சிறிய தகப்பன். சம்பவம் நடந்த தினம் தகப்பனுடன் இருந்தேன். சிறிய தகப்பன் அங்கு வந்தார். தகப்பனுர் நித்திரையால் எழுந்து எனது தம்பியிடம் தண்ணீர் கொண்டுவரச் சொன்னுர். பின் தம்பியை அடிக்கப் போனுர். இறந்த சிறிய தகப்பனுர் அவனுக்கு அடிக்கவேண்டாம். எனக்கு அடி என்று கூறினுர். இரவு 9 மணியளவில் இச்சம்பவம் நடந்தது. நான் சிறிய தகப்பனை அவரது வீட்டில் கொண்டுபோய் விட்டுவிட்டு வந்தேன். அங்கு அவர் பேசிக்கொண்டிருந்தார்.

முத்தாச்சி மாமிக்கு பூமலர் என்ற பெயருடைய மகள் இருப்பதாகவும் அவளை தனக்குத் திருமணம் செய்ய ஒழுங்கு நடைபெற்றதாகவும், இது தகப்பனுருக்கு விருப்பமில்லை என்றும் சாட்சி மேலும் கூறினுர்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது,

---

### 7 பேர் மட்டுமே கலந்துகொண்டனர்

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் கடற்கரை வீதியிலுள்ள முன்னுள் மாநகரசபை உறுப்பினர் ஏ. ஜி.இராஜசூரியர்இல்லத்தில்முன்னுள் மாநகரசபையினரின்கூட்டம்சென்றமாதம் 26-ந் திகதி மாலை முன்னுள் உபமேயர் திரு. சே. வி. தெய்வேந்திரன் தலைமையில் நடைபெற்றது. முன்னுள் அங்கத்தவர் சிலர் மட்டுமே இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இக் கூட்டத்தில் கலந்துகொள்ளும்படி முன்னுள் மாநகரசபை உறுப்பினர்கள் எல்லாருக்கும் அழைப்பு அனுப்பப்பட்டதாகவும், முன்னுள் மேயர் திரு. எஸ். டி. துரையப்பா, தன்னுல் கலந்துகொள்ள முடியாத நிலையில் இருப்பதாக அறிவித்துள்ளாரென்றும் திரு. ராஜசூரியர் கூறினுர்.

இக் கூட்டத்தில் முன்னுள் மாநகரசபை உறுப்பினர்களான திருவாளர்சுள் கே. வி. தெய்வேந்திரன், ரி. எஸ்.துரைராஜா, தம்புநந்தையா, ஏ. நடராசா ஏ. ஜி. ராஜசூரியர், அன்ரனி, எஸ். பேரின்பநாயகம் ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

---

இப்பத்திரிகை''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1967-ம் ஆண்டு மே மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது'

## உடுவில் கைகலப்பில் நால்வர் படுகாயம்

யாழ்ப்பாணம், வியா.

உடுவிலில் நேற்றுமாலை நடைபெற்ற ஒரு கைகலப்பைத் தொடர்ந்து அதே இடத்தைச் சேர்ந்த மூன்று சகோர்தரர்கள் படுகாயங்களுக்குள்ளாகி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயங்களுக்குள்ளான இராமலிங்கம் சண்முகநாதன் (27 வயது) இராமலிங்கம் சின்னத்தம்பி [23 வயது] இராமலிங்கம் அருமைத்துரை [18வயது]ஆகிய மூவரிலும், சின்னத்தம்பி, அருமைத்துரை ஆகிய இரு சகோதரர்களினதும் நிலைமை கவலைக்கிடமானதாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களை வெட்டியதாக சந்தேகத்தின்பேரில் காயங்களுக்குள்ளானவர்களின் தாயின் சகோதரனுன வேலன் பெருமாள் என்பவரை பொலிஸார் தேடுகின்றனர்.

சந்தேக நபரான வேலன் பெருமாளுக்கும் காயங்களுக்குள்ளான மூன்று சகோதரர்களுக்குமிடையே மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று நடைபெறுவதாகவும், அவ்வழக்கு விசாரணைக்குச் சென்று மூன்று சகோதரர்களும் வீட்டுக்குத் திரும்பி வருகையிலேயே, ஒழுங்கை ஒன்றிற்குள் வைத்து மூவரும் வெட்டப்பட்டதாகவும்தெரிகின்றது. இந்தச் சம்பவத்தில் கத்தி வாள் முதலியன பாவிக்கப்பட்டதாகவும் தெரிகின்றது.

அபாயகரமான நிலைமையிலிருக்கும் இரு சகோதரர்களும் வெட்டப்பட்டதால், அவர்களது உள்ளுறுப்புக்கள் வெளியே வந்ததாகவும் உடனடியாகச் சத்திர சிகிச்சைசெய்ய அனுமதிக்கப்பட்டனர்' சந்தேக நபர் இன்னமும் கைது செய்யப்படவில்லையெனத் தெரிகின்றது. பொலிஸார் புலன் விசாரணை செய்துவருகின்றனர். [ந. நி.]

### வெளி நோயா..

[1-ம் பக்கத் தொடர்ச்சி[

கூட்டத்துக்கு ஆஸ்பத்திரி சபைத் தலைவர் திரு. மு. வைரமுத்து தலைமைவகித்தார்.

நவீன முறையில் வெளிநோயாளர் சிகிச்சை நிலையம் ஒன்றை இங்கு அமைப்பதற்கு அரசாங்கம் சென்ற வருடம் ஐந்து லட்சம் ரூபா ஒதுக்கியிருந்தது. ஆனுல் கட்டடம் கட்ட காணி இல்லாததால் இப்பணம் உபயோகிக்கப்படவில்லை. எனவே இவ்வருடம் மீண்டும் 5 லட்சம் ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியுள்ளதால் இம்முறையும் இப்பணத்தை விரயமாக்காது வெளிநோயாளர் சிகிச்சை நிலையத்தைக்கட்டும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதெனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி சுப்பிரின்டன் டாக்டர் இராஜரத்தினம், யாழ். மாநகர சபை என்ஜினியர் திரு. வைத்தியலிங்கம், ஆஸ்பத்திரி சபைத் தலைவர் திரு மு. வைரமுத்து ஆகியோரும் ஆஸ்பத்திரி சபை கட்டட உபகுழுவினரும் மின்சார நிலையத்துக்கு அருகாமையில் உள்ள வெற்றுக் காணிகளைச்சென்று பார்வையிட்டனர். (ந. நி.)

வாழ்க்கைப் படகு
குறுநாவல்
நான்கு இளம்பெண்கள் எழுதியது
8-5-67
'ஈழநாடு'
வார மலரில்
வெளிவருகிறது

### கைத்தொழில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பேட்டையை எங்கு அமைப்பது என்று கூட்டத்தில் ஆராயப்பட்டது. கொக்குவில், கோண்டாவில் பகுதியில் கைத்தொழில் பேட்டையை அமைப்பதுபற்றி ஆராயப்பட்டபோது, இப்பகுதியிலிருந்து தற்போது யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சுமார் 20 லட்சம் மக்களுக்கும் தண்ணீர் விநியோகம்செய்வதால், இப்பகுதியில் கைத்தொழில் பேட்டையை அமைத்தால் அது இப்பகுதி விவசாயத்தைப் பாதிக்கும் எனவும், எனவே இங்கு கைத்தொழில் பேட்டையை அமைப்பது சாத்தியமாகாது எனவும் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.

அனேகமாக இக் கைத்தொழில்பேட்டை அச்சுவேலியிலேயே அமைக்கப்படலாம் என்று இக் கூட்டத்தில் கலந்துகொண்ட முக்கிய அதிகாரியொருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார். நேற்றைய கூட்டத்தில் கைத்தொழில்பேட்டையை அமைக்கும் இடம் நிச்சயிக்கப்படாத போதும், இன்று மாலை கைத்தொழில் அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. ஜேம்ஸ் லனரோல், அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகராவைச் சந்தித்து கைத்தொழில் பேட்டை அமைக்கப்படும் இடம்பற்றி நிச்சயிக்கவிருக்கிறுர். அதன்பின்னர் கைத்தொழில்அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தனுவினுல் அது அங்கீகாரம் பெறுவதற்காக அனுப்பிவைக்கப்படும். [ந. நி.]

### இலக்கண சுவாமிகள் குருபூசை

யாழ்ப்பாணம். வியா.

இலக்கணச் சுவாமிகள் எனபபடும் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகளின் குருபூசை நேற்று பகல் 12 மணியளவில் ஈழநாடு காரியாலயத்தில் சிறப்பாகக் ககாண்டாடப்பட்டது.

இவ்வைபவத்தில் வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன், நிர்வாக அதிபர் திரு. மு. வைரமுத்து, ஆசிரியர் திரு. கே. பி. ஹரன் ஆகியோர் சொற்பொழிவாற்றினுர்கள். பக்திப் பாடல்களும் பாடப்பட்டன.

### அபராதம்

ஊர்காவற்றுறை, புதன்

யாழ்ப்பாணம் - திருநெல்வேலியைச் சேர்ந்த சின்னத்துரை பொன்னுத்துரை என்பவர். சட்டவிரோதமாகச் சாராயம் விற்றுர் என்ற குற்றத்திற்கு ஊர்காவற்றுறை நீதிபதி திரு. ஜமீல் எழுபத்தியைந்து ரூபா அபராதம் விதித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org